# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்துபோகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்றார். இயேசு அவரிடம், "அம்மா, அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றார். (யோவான் 2:1-3)




கடந்த 30 செப்டம்பர் 2019-ஆம் நாள், திருத்தந்தை ஆண்டின் பொதுக் காலத்தின் 3 -ஆம் ஞாயிறை இறைவார்த்தை ஞாயிறு என்று கொண்டாடப் பணித்தார். இதனி மித்தம் அடுத்த வாரம் ஆண்டின் பொதுக்காலத்தின் 3-ஆம் ஞாயிறு என்பதால், அன்று 'இறை வார்த்தை ஞாயிறு' சிறப்பாக உலகெங்கும் கொண்டாடப்படவுள்ளது.




அந்நாளுக்கான சிறப்பு செய்தியாக கீழ்க்கண்ட செய்தி மலேசியா, புருணை மற்றும் சிங்கப்பூர் வட்டார திருவிவிலிய ஆணையம் கீழ்க்கண்ட செய்தியை நமது சிந்தனைக்கு வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் சாரா, கடவுளைத் தனிப்பட்ட முறையில் சந்தித்த முதல் அனுபவத்திற்குப் பின், திருவிவிலியத்தைச் சிரத்தோடு வாசிக்கத் தொடங்கினாள். விவிலியத்தின் பக்கங்களைப் புரட்டும் போது திருஅவையில் உள்ள கடவுளோடு தொடர்பு கொள்கிறோம் என்பதை அவளால் உணர முடிந்தது. விவிலியத்தைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் இருந்தாலும் கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்டதாக அவள் உணரவில்லை. ஏனெனில் விவிலியத்தை அவள் தனியாக வாசிக்கவில்லை. வாராந்திர மறையுரைகள், மறைக்கல்வி வகுப்புகள், கிறிஸ்துவப் பாடல்கள், விவிலிய வகுப்புகள், விசுவாசப் பயிற்சிகள், சக-கத்தோலிக்க மற்றும் கிறிஸ்துவ நண்பர்கள் ஆகியோரின் துணையுடன் விவிலியத்தை வாசிப்பதால் அவளால் இறைவார்த்தையைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆயினும் சிலப் பகுதிகளைப் புரிந்து கொள்ள அவளுக்குச் சிரமமாக இருந்தது என்பது உண்மையே.

சமூக ஊடகங்களின் அறிமுகத்தால், பரந்த பல்வேறு தகவல் களஞ்சியங்களைக் கண்டு கொண்டாலும், இளம் வயது முதல் அவள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு முரணாக பல விபரங்கள் அவற்றில் இருந்தன. கத்தோலிக்கர் அல்லாத அல்லது கத்தோலிக்க எதிர்ப்புக் களஞ்சியங்களிலிருந்து மாறுபாடான கருத்துகளை அவள் கண்டாள். இதனால், தனது கத்தோலிக்க நம்பிக்கை பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள அவளை அவை தூண்டின. அவளது நம்பிக்கை பற்றி நியாயமான விளக்கங்களை அவள் கண்டாள் (1பேதுரு 3:15). அண்மைய காலத்தில், திருஅவைக்குள் அதுவும் திருஅவை தலைவர்களிடமிருந்து எதிர்மாறான வாதங்கள் எழுவதை அவள் கேள்விப்பட்டாள். "இயேசு உண்மையிலேயே இதனைக் கூறினாரா?" போன்ற கேள்விகளை அவர்கள் கேட்டார்கள்.

கடவுளின் அதிகாரத்துடன் எழுதப்பட்ட இறை வார்த்தையே விவிலியம் என்பதை பலர் நம்பாமல் இருக்கின்றனர். திருவருளால், திருஅவை எண்ணத்தோடு விவிலியத்தை வாசிக்க சாராவின் சில நண்பர்கள் உதவினர்.

இதில் மூன்று கருத்துகள் அடங்கியுள்ளன:

1) ஐயப்பாடின்றி பக்தியோடும் நம்பிக்கையோடும் விவிலியத்தை வாசிப்பது;

2) திருவழிபாடு, திருஅவை திருமரபு, திருஅவை அறிஞர்கள், புனிதர்கள், இறுதியாக வெளியீடுகண்ட கத்தோலிக்கத் திருஅவை மறைக்கல்வி நூல் (CCC) ஆகியவற்றில் வெளிப்படும் காலத்தால் அழியாத திருஅவையின் பாரம்பரியத்தின்படி விவிலியத்தை வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

3) அருள்பணியாளர்களிடமிருந்து உண்மையிலேயே படித்துக் கொள்ள வேண்டுமென்ற மனதோடு இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக விவிலியத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

நிறைவில், உயிருள்ள இறைவார்த்தையான இயேசு கிறிஸ்துவைச் சந்தித்து -அறிந்து கொள்வதற்கு விவிலியம் நமக்கு உதவ வேண்டும். அது, தாகத்தால் தவிக்கும் மனிதர், நீர் அருவியைக் காண்பது போன்றதொரு சந்திப்பாக அமையும். தாகம் எடுக்கும் போதெல்லாம் விரும்பும் அளவுக்குப் பருகிக் கொள்ளலாம். அள்ள அள்ளக் குறையாத நீர் கிடைப்பது குறித்து நன்றி பாராட்ட வேண்டும். அருவி வற்றிப்போனால், தாகத்தைத் தீர்க்க நீர் இல்லாமல் போகும்.

## திருமுழுக்கின்போது பெறப்பட்ட கிறிஸ்தவ அடையாளத்தைப் பேணுங்கள்-திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்:** சிஸ்டைன் சிற்றாலயத்தில் 16 குழந்தைகளுக்கு திருமுழுக்குக் கொடுப்பதற்கு முன், குழந்தைகள் பெறவிருக்கும் கிறிஸ்தவ அடையாளத்தைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் பெற்றோர்கள் மற்றும் ஞானப் பெற்றோருக்கு அவர்களின் பொறுப்பை நினைவூட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

"உங்கள் குழந்தைகளின் கிறிஸ்தவ அடையாளத்தைப் பாதுகாப்பதுதான் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்கள் பணி, என்று திருத்தந்தை கூறினார். "இது தினசரி அர்ப்பணிப்பு, இன்று அவர்கள் பெறும் ஒளியுடன் வளர அவர்களுக்கு உதவுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆண்டவரின் திருமுழுக்கு விழாவான ஜனவரி 9 ஆம் நாள் திருமுழுக்கு கொண்டாட்டத்தின் போது சிஸ்டைன் சிற்றாலயத்தில் வத்திக்கான் ஊழியர்களின் குழந்தைகள்—ஏழு சிறுவர்கள் மற்றும் ஒன்பது சிறுமிகளுக்குத் திருத்தந்தை திருமுழுக்கு அளித்தார்.

"இந்தக் குழந்தைகளும் இன்று கடவுளின் ஆசியையும் இயேசுவின் மீட்பையும் பெற்று, வாழ்க்கையில் திடம் பெறுவதற்காக வெறும் ஆன்மாக்களுடன் இங்கு வந்துள்ளனர்." என்று அவர் கூறினார். "உங்கள் பிள்ளைகள் இன்று அவர்களின் கிறிஸ்தவ அடையாளத்தைப் பெறுவார்கள். மேலும் நீங்கள், பெற்றோர் மற்றும் ஞானப் பெற்றோர், இந்த அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும்." என்று அறிவுறுத்தினார்.



மேலும் அக்குழந்தைகள் இயேசு கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்பினர் என்பதால் கிறிஸ்தவ அடையாளத்தை என்றும் இழந்துவிடாமல் பேணிக்காப்பதை பெற்றோர் தலையாயக் கடமையாகக் கருத வேண்டும் என்றார்.

# கம்பாரில் உள்ள விளிம்புநிலை குடும்பங்களுக்கு உதவிபணி தொடர்கிறது

**கம்பார், பேராக்:** இங்குள்ள திருஇருதய ஆண்டவர் பங்கு ஏழைகளைப் பேணி காத்தலும் அக்கறை கொள்ளுதலும் என்பது நீண்ட வரலாற்றைக் கொண் டுள்ளது.

சமீபத்தில், இப்பங்கு கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த 15 பேர் கொண்ட கத்தோலிக்கக் குழுவுடனான கூட்டு முயற்சியில் கம்பார் நகருக்கு அருகாமையில் வாழும் 20 ஏழைக் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒரு நிதி மற்றும் பொருளுதவி நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தது.

ஜனவரி 8 ஆம் தேதி, பங்குத்தந்தை சைமன் ஆனந்த் மற்றும் தமிழ் திருத்தூதுப்பணிக்குவின் ஒருங்கிணைப் பாளர் டேனியல் ஆகியோர் தத்தம் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஏழு பேர் இந்திகழ்சியில் பங்குகொள்ள அழைத்திருந்தனர். அன்று, 20 ஏழைக் குடும்பங்களுக்கு மொத்தம் 700 கிலோ எடையுள்ள 17 வகையான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. வர முடியாதவர்களுக்குப் பின்னர் தனிப்பட்ட முறையில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று உதவிப்பொருள்கள் வழங்க வுள்ளதாக அறிவிப்புச் செய்யப்பட்டது.

மேற்கூறப்பட்ட 20 குடும்பங்களில் கத்தோலிக்கர்கள் மற்றும் பிற மதத்தினரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் இந்த பங்கு ஏறக்குறைய 48 ஏழைக் குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவிகளை வழங்கி வருகிறது என்று இந்நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு தலைவர் கூறினார்.

அருட்பணி சைமன் அவர்கள் கோலாலம் பூரில் இருந்து வந்த குழுமத்தை அவர்களது பணியைத் தொடர ஊக்குவித்தார், குறிப்பாக தொற்றுநோய்களின் போது சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களை, குறிப் பாக சுற்று வட்டாரத்தில் வசிப்பவர் களைச் சந்தித்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் மற்றொரு குழுவினரிடமிருந்து 30 அல்-கிதாப் (பஹாசா மலேசியா திருவிவிலியம்) பெற்றதோடு, அதை அவர் ஆசீர்வதித்து, திருவிவிலியம் கொண்டிராத தனது பஹாசா மலேசியா பேசும் பங்கு மக்களுக்கு வழங்கினார். கத்தோலிக்



அருள்பணி சைமன் அவர் உதவியாளர் டேனியலுடன்.

கர்கள் கடவுளுடைய வார்த்தையைப் படிக்கும் நல்ல பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவும், இறைவனிடம் நெருங்கி வரவும் இது பேருதவியாகயிருக்கும்




# இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க திருமுழுக்கு இறையியல்

கடந்த வாரம், ஆண்டின் பொதுக்காலத்தின் முதல் ஞாயிறன்று, ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழாவைக் கொண்டாடி னோம். அதன் தொடர்பாக, திருஅவையில் கொண்டாடப்படும் திருமுழுக்குப் பற்றிய இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினையில், திருஅவை சட்டத்தின் ஒளியில் சிறு விபரங்களை அறிவோம். ஏனெனில், திருமுழுக்குப் பற்றிய போதனைகள் அதன் அருளடையாள இறையியல் பின்னணியில் புரிந்துகொள்வது இன்றியமையாதது. (திச- திருஅவை சட்டம்)

- ◊ திருமுழுக்குப் பெற்ற புதிய கிறிஸ்தவரை திருஅவையில் அறிமுகப்படுத்துகிறது. (திச 16)
- ◊ திருமுழுக்கின் வழியாக புதிய உறுப்பினர் இயேசு கிறிஸ்துவின் மறையுடலில் உறுப்பினராகிறார் (திச 6)
- ◊ திருமுழுக்குப்பெறுபவர் இயேசு கிறிஸ்துவின் இறப்பு-உயிர்பு என்னும் பாஸ்கா மறைபொருளில் பங்கேற்கிறார் (திச 7)
- ◊ திருமுழுக்கின் வழியாக திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் இறைவனின் அன்பு பிள்ளைகளாக மாறுகிறோம் (திச 6)
- ◊ திருமுழுக்குப் பெற்ற அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசக் குருத்துவத் திருகூட்டக் குடும்பமாக மாறுகிறோம் (பொநி 3)
- ◊ திருமுழுக்கு அழியாத முத்திரை என்னும் பேற்றைப் பதித்து இறைமக்களை இறைவனுக்கு உகந்த வழிபாடு செலுத்தும் தகுதியுடையவர்களாக ஆக்குகிறது. (திச 11)
- ◊ திருமுழுக்குப் பெறும் அனைவரும் இறைவார்த்தையை அறிவிக்கும் கடமையைப் பெறுகின்றனர் (திச 11)
- ◊ திருமுழுக்கு ஒற்றுமையின் அடையாளம்.
- ◊ திருமுழுக்குப் பெறுபவர் இறைவனின் குழந்தையாக மறுபிறப்புப் பெறுகிறார். (திச 110)
- ◊

## தேசிய வெள்ள நிவாரண நிதிக்கு மலேசியர்கள் தாராளமாக பங்களிக்கின்றனர்

**கோலாலம்பூர்:** டிசம்பரில் மூன்று நாட் களாக தொடர்ந்து பெய்த கனமழையால், தீபகற்ப மலேசியாவில் டிசம்பர் 18ஆம் தேதி தொடர் வெள்ளம் மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

நாடு முழுவதும் 8 மாநிலங்களை மழை பாதித்தது, 71,000 க்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் இடம் பெயர்ந்தனர், 54 இறப்புகள் மற்றும் 2 பேர் காணவில்லை. பலர் அனைத்தையும் இழந்தனர். மற்றவர்கள் அதிர்ச்சியில் இருந்து மீண்டு வருகிறார்கள். சிலாங்கூர் மாநிலம், குறிப்பாக ஷா ஆலம் நகர் வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. வீடுகள் மற்றும் வாகனங்கள் தண்ணீரில் மூழ்கின, உள்கட்டமைப்பு மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு குறிப்பிடத் தேவையில்லை.

இது தொடர்பாக, டிசம்பர் 20 அன்று, மலேசியாவின் கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு (CBCM) மற்றும் Caritas Malaysia இணைந்து வெள்ள நிவாரண முயற்சி களுக்காக தேசிய நிவாரண நிதியை அறிமுகப்படுத்தியது.

தொடங்கப்பட்ட எட்டு நாட்களுக்குப் பிறகு, நிதி RM209,000 ஆக இருந்தது மற்றும் 6 ஜனவரி 2022 நிலவரப்படி, நிதி RM520,000 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய வெள்ள நிவாரண நிதியானது, உள்ளூர் பங்கு பணிக்குழுக்கள் மூலம் நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட அனைவருக்கும் கிடைக்கச் செய்தது.

ஜனவரி 22 வரை செயல்படும் இந்த நிதிக்கு பங்களித்த அனைத்து மலேசியர்களின் பெருந்தன்மைக்கு ஆயர்கள் மற்றும் காரித்தாஸ் அலுவலகங்கள் நன்றி தெரிவிக்கின்றன. பங்களிக்க விரும்புவோர் தொடர்ந்து அவ்வாறு செய்யலாம் (மேலும் தகவலுக்கு கீழ்க்கண்ட முகநூலுடன் தொடர்பு கொள்ளவும்.

https://www.facebook.com/CaritasMalaysia1

# திருமுழுக்கால் துணிவுள்ள இறைவாக்கினர்களாவோம் !

நாம் ஒரு புதிய ஆண்டின் தொடக்கத்தில் நுழைந்துள்ளோம். இந்த ஆண்டு நம் உள்ளத்தில் புதிய சிந்தனைகளோடும் புதிய திருப்பங்களோடும் வாழ அழைக்கப்படுகின் றோம். நம் திருத்தந்தையின் செய்தியான "இவ்வுலகின் இருளுக்கு ஒளியேற்ற வந்த ஒளியாம் இறைவன், நம் இதயத்திற்குள் குடியேற அவரை அனுமதிப் போம்" என்ற இறைவேண்டல் அழைத்த லோடு நாம் இவ்வாண்டில் பயணிப்போம்.

இன்றைய முதல் வாசகத்தில் நாம், எசாயாவைக் குறித்து "ஆண்டவர் தம் நாவினால் சூட்டும் புதியதொரு பெயரால் நீ அழைக்கப்படுவாய், ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய். என்று ஆண்டவரின் மகிழ்ச்சி அவரை மகிழ்விப்பதை நாம் காண்கிறோம்.

இரண்டாம் வாசகம், திருமுழுக்கில் நாம் கடவுளிடமிருந்து பெறும் மிகப் பெரிய பரிசு தூய ஆவியாரின் கொடைகள் என்கிறது. இக்கொடைகள் நமது நலனுக் காகவும் பிறர் நலனுக்காகவும் வழங்கப்படு கின்றது. இந்த மனநிலையோடு நாம் இக்கொடைகளைப் பயன்படுத்துகின்ற போது கடவுளுக்கே அழகுச் சேர்க்கும் மணிமகுடமாக நாம் மாறுகின்றோம். நம் அழகினைக் கண்டு மகிழக் கடவுள் நம்மை அவரது கரங்களில் வைத்து இரசிப்பார். மனுவுருவெடுத்த தம் மகன் இயேசுவுக்குக் கொடுத்த வரங்களைக் கொண்டு அவர் பிறரின் வாழ்க்கைச் சூழல்களில் குறுக்கிட்ட அவல நிலை களைக் களைய முன்வருகின்றார்.

இயேசு தன் வாழ்வில் செய்த முதல் புதுமையைத்தான் இன்றைய நற்செய்தி வாசகம் நமக்குக் காட்டுகின்றது. இயேசு வின் முதல் புதுமையில் பங்கேற்றவர் அன்னை மரியா. மரியா பரிந்துரைக்கும் போது முதலில் எனது நேரம் வரவில்லை என மறுத்துக் கூறினாலும் இறுதியில் இயேசுவும் இணங்குகிறார். இயேசுவை முதல் புதுமையைச் செய்ய வைக்கிறார். இந்த நிகழ்வில் நாம் மூன்று பேரைக் காண்கிறோம். இயேசு, மரியா மற்றும் பணியாளர்கள். மரியா பணியாளர்களிடம் "அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்" என்று கூற, பணியாளர்களும் இயேசு கூறியப்படி தண்ணீரை நிரப்புகிறார்கள். அங்கு புதுமை நிகழ்கிறது. நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் புதுமையைக் காண வேண்டும்.

அந்த திருமண வீட்டின் வாசலில் தூய்மைச் சடங்கிற்காக (நுழையும் முன் கால்கள் சுத்தம் செய்ய) வைக்கப்பட்டிருந்த அசுத்த நீர் கொண்ட தொட்டியில், நீர் நிரப்பப் பட்டு புதிய இராட்சை இரசத்தை ஆண்ட வர் அளிக்கிறார். அவ்வாறே, இப்புதிய ஆண்டில் நம் பழைய சிந்தனைகள், எண்ணங்கள், செயல்கள் யாவும் மாற்றம் காண வேண்டும். புதிய திராட்சை இரசமாக நாம் மாற வேண்டும். இதற்கு அன்னை மரியாவின் பரிந்துரை இன்றியமை யாதது. கானாவூரில் இயேசு செய்த புதுமை இதைத் தான் சுட்டிக் காட்டுகின்றது, மரியாவின் எண்ணமும் பிறர் நலத்தையே சார்ந்திருக்கின்றன. அவர் மகன் இயேசுவின் சிந்தனையும் பிறர் நலத்தையே முன்னிறுத்து கின்றது. இயேசுவைப் போன்று கடவுள் கொடுத்தக் கொடைகளைப் பயன்படுத்து கின்ற போது நாமும் சாதாரண நிலையை (நீரை) உன்னத நிலையாக (திராட்சை ரசமாக) மாற்ற முடியும். ஆகவே, இயேசுவின் வழியில் நடக்கும் நாம், துணிவுள்ள இறைவக்கினர்களாவோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

*-சவரிநாதன்- சுங்கைபட்டாணி, கெடா*

### பொதுக்காலம் 2-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எசா 62: 1-5 |
| தி. பாடல்: | 96:1,2a.2b-3.7-8a.9-10ac |
| 2-ம் வாசகம்: | 1கொரி 12: 4-11 |
| நற்செய்தி: | யோவான் 2: 1-12 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 2